பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**08 02 2026** **6 45**

ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - மலேசியா இடையேயான நட்புறவை வலுப்படுத்தும் வகையில் மலேசியாவில் இந்திய தூதரகம் விரைவில் செயல்படத் தொடங்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தொன்மையான தமிழ்மொழியின் பெருமை குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி உலக நாடுகளிடையே எடுத்துரைத்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் ஜவுளித்துறையின் ஏற்றுமதிக்கு உத்வேகம் அளித்திடும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. நீர் ஆதாரங்களை மேம்படுத்தும் வகையில் பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

5. உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 29 ரன் வித்தியாசத்தில் அமெரிக்காவை வென்றது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - மலேசியா இடையேயான நட்புறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் மலேசியாவில் இந்திய தூதரகம் விரைவில் செயல்படத் தொடங்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில், அந்நாட்டின் வளர்ச்சிக்காக வெளிநாடு வாழ் இந்தியர்கள் சிறந்த பங்களிப்பை வழங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்திய கலாச்சார மற்றும் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் வெளிநாடு வாழ் இந்தியர்களின் செயல்பாடுகள் பாராட்டுக்குரியது என்று அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடு வாழ் இந்தியர்களின் உற்சாகம், அன்பு மற்றும் அவர்கள் அளித்த வரவேற்பு மிகுந்த நெகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் கூறினார்.

கோலாலம்பூரில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் அளித்த வரவேற்பு என்றென்றும் நினைவில் இருக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

முன்னதாக கோலாலம்பூரில் நடைபெற்ற பிரமாண்ட பரதநாட்டிய நிகழ்ச்சியை பிரதமர் பார்வையிட்டார்.

<<<<>>>>

மலேசியாவில் உள்ள இந்திய வம்சாவளியினரியடையே பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆற்றிய உரை இரு நாடுகளுக்கும் இடையேயான வரலாறு மற்றும் கலாச்சார பிணைப்புகளை எடுத்துரைக்கும் வகையில் அமைந்திருந்தது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இரு நாடுகளுக்கும் இடையே நட்புறவை மேம்படுத்துவதில் இந்திய வசம்சாவளியினரின் பங்களிப்பு அளப்பரியது என்று குறிப்பிட்டுள்ளார்.

மலாயா பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் மையம அமைக்கப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது என்று அவர் கூறியுள்ளார்.

உலக அளவில் இந்தியாவின் வளமான கலாச்சார மரபுகளை எடுத்துரைப்பதை இது பிரதிபலிப்பதாக உள்ளது என்று திரு. ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

நாடுகளுக்கு இடையேயான வலுவான கலாச்சார ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் இந்தியாவின் வளமான பாரம்பரியத்தை உலக அரங்கில் கொண்டு செல்வதற்கான முன்முயற்சியாக அமையும் என்று திரு. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

<<<<>>>>

தொண்மையான தமிழ்மொழியின் பெருமை குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி உலக நாடுகளிடையே எடுத்துரைத்து வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மலேசியாவில் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர், அங்குள்ள மலாயா பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் மையம் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளது ஒவ்வொரு தமிழருக்கும் பெருமை சேர்க்கும் தருணம் என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் இலக்கியம் காலத்தால் அழியாதது என்றும், தமிழ் மொழி உலகிற்கு இந்தியா வழங்கியுள்ள பரிசு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழிக்குப் பெருமை சேர்க்கும் வகையில் மலேசியாவில் திருவள்ளுவர் மையம் அமைக்கப்படும் என்று அறிவித்ததற்காக

பிரதமருக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் ஜவுளித்துறையின் ஏற்றுமதிக்கு உத்வேகம் அளித்திடும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இது தொடர்பாக மத்திய ஜவுளி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதன் மூலம் துணிகள் மற்றும் ஆயத்த ஆடைகளின் ஏற்றுமதி **118** பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையேயான ஜவுளி வர்த்தகத்தை வலுப்படுத்த உதவிடும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜவுளித்துறையில் வரும் **2030**-ம் ஆண்டுக்குள் **100** பில்லியன் டாலர் என்ற வர்த்தக இலக்கை அடைவதற்கு இத்தகைய ஒப்பந்தங்கள் உதவிடும் என்று அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

<<<<>>>>

புலிகளைப் பாதுகாப்பதற்கான கொள்கைகள் மறு ஆய்வு செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் **Alwar**-ல் நடைபெற்ற இரண்டு நாள் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் ஆலோசனைக் கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளை மறு ஆய்வு செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

புலிகள் பாதுகாப்பு குறித்த கொள்கைகள் வகுக்கப்பட்டு **50** ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் தற்போதைய சவால்களுக்கு ஏற்ப அவற்றை திருத்தியமைக்க வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டார்.

போட்ஸ்வானாவில் இருந்து கொண்டு வரப்படும் சிறுத்தைகள் இந்த மாத இறுதிக்குள் இந்தியா வந்தடையும் என்று அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச புலிகள் கூட்டமைப்பில் இதுவரை **24** நாடுகள் இணைந்துள்ளதாக அவர் கூறினார்.

காயமடைந்த வன விலங்குகளை மீட்டு சிகிச்சையளிப்பதற்கான நிலையான நடைமுறைகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று திரு. பூபேந்தர் யாதவ் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

நீர் ஆதாரங்களை மேம்படுத்தும் வகையில் பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக மாநில வேளாண் அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் 57 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்கட்டமைப்பு திட்டப் பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டி பேசினார்.

மழைநீர் சேகரிப்பு, நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிப்பது, வெள்ள பாதிப்பில் இருந்து விளைநிலங்களைப் பாதுகாப்பது ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மழைக் காலங்களில் வெள்ள பாதிப்புகளை தடுக்கும் வகையில் ஆற்றின் கரைகளை வலுப்படுத்துவது, தடுப்புச் சுவர் அமைப்பது

போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மாநில அரசு செயல்பட்டு வருவதாக சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. நாசர் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பூவிருந்தவல்லி மற்றும் மதுரவாயல் சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை அவர் வழங்கினார்.

தமிழ்நாட்டில் இதுவரை 22 லட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மகளிர் உரிமைத் தொகை, புதுமைப்பெண் திட்டம் உள்ளிட்ட மாநில அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களை திரு. நாசர் பட்டியலிட்டார்.

<<<<>>>>

சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த பார்வைக் குறைபாடுடன் பிறந்த சிவகாமி பாரா விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று ஆசிய

அளவில் பல்வேறு பதக்கங்களைப் பெற்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

விளையாட்டின் மீதான அவரது ஆர்வம் மற்றும் குடும்ப சூழலைக் கருத்தில் கொண்டு பாரா தடகள விளையாட்டு பயிற்சியாளராக மாநில அரசு நியமித்துள்ளதற்கு நன்றியை தெரிவித்துக்கொள்வதாக அவர் கூறினார்.

**(Voice Byte - Sivagami - 35 Sec)**

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைனின் மின்சார உற்பத்தி மற்றும் விநியோகக் கட்டமைப்புகளைக் குறி வைத்து ரஷ்யா நேற்றிரவு கடும் தாக்குதல் நடத்தியது.

-------------

ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால், மேற்கு ஆசியாவில் உள்ள அமெரிக்காவின் ராணுவத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று அந்நாட்டு வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

-------------

நைஜீரியாவில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

-------------

ஜம்மு - காஷ்மீரில் பூஞ்ச் மாவட்டத்தையொட்டிய எல்லைப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினரின் தயார்நிலை குறித்து ராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி ஆய்வு செய்தார்.

-------------

அசாம் சுயசார்பு இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ், முதல் கட்டமாக 5 ஆயிரத்து 572 இளம் தொழில்முனைவோருக்கு, அம்மாநில முதலமைச்சர் திரு ஹிமந்தா பிஸ்வாஸ் சர்மா நிதியுதவி வழங்கினார்.

-------------

சேலம் மாவட்டம் தாரமங்கலம் கைலாசநாதர் கோவில் தெப்பத் திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

-------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் உழவர் நலத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கை மாநில அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா தொடங்கி வைத்தார்.

-------------

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே மலைப் பகுதியில் சுற்றித் திரிந்த சிறுத்தையை வனத்துறையினர் பிடித்து வனப் பகுதிக்குள் விடுவித்தனர்.

-------------

மத்திய அரசின் முத்ரா கடனுதவி திட்டத்தை குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று Central வங்கியின் நிர்வாக இயக்குநர் திரு. கல்யாண் குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 29 ரன் வித்தியாசத்தில் அமெரிக்காவை வென்றது.

மும்பையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 161 ரன் எடுத்தது.

162 எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய அமெரிக்கா 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 132 ரன் எடுத்தது.

-----------

ஆசிய துப்பாக்கிசூடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் இளவேனில் வாலறிவன் தங்கப்பதக்கம் வென்றார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் **10** மீட்டர் ஏர் ரைஃபிள் பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

**<<<<The End>>>>**